**மதுரை மாநகராட்சி**

**ஆணையாளர்/ தனி அலுவலர் தலைமையில் நடத்தப்படுப்**

**மாமன்ற சிறப்பு கூட்டத்தின் கூட்டக்குறிப்புகள்**

**10.11.2021-ந் தேதி நேரம் : மாலை:04.00 மணி**

**1. CW1/38324/2011**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.241 நாள்: 01.10.1996 மாமன்ற தீர்மான எண்.171 நாள் 04.10.1996 தீர்மானத்தின்படி 72 வார்டுகளை நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு (வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு) கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வந்தது.

| வ. எண் | வட்டாரம் | வட்டாரத்திற்குள் அமையப்பெற்ற வார்டுகள் விவரம் | மொத்த வார்டுகள் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை | மொத்த பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு | 1 முதல் 21 வரை | 21 | 275000 | 19.55 ச.கி.மீ. |
| 2. | கிழக்கு | 44 முதல் 59 வரை | 16 | 280000 | 6.12 ச.கி.மீ. |
| 3. | தெற்கு | 31 முதல் 43 வரை, மற்றும் 60 முதல் 65 வரை | 19 | 285000 | 7.40 ச.கி.மீ. |
| 4. | மேற்கு | 22 முதல் 30 வரை | 16 | 280000 | 18.78 ச.கி.மீ. |

இந்நிலையில் அரசாணை எண்.220 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்துறை) நாள்: 28.09.2010 ன்படி மதுரை மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்து மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 3 பேருராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள் மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியுடன் 25.10.2011-ல் இணைக்கப்பட்ட நகராட்சிகளான ஆனையூர், அவனியாபுரம், திருப்பரங்குன்றம் ஆகிய மூன்று நகராட்சிகள், ஹார்விப்பட்டி, திருநகர், விளாங்குடி ஆகிய மூன்று பேரூராட்சிகள் மற்றும் மேலமடை, உத்தங்குடி, வண்டியூர், கண்ணனேந்தல், நாகனாகுளம், திருப்பாலை, சின்ன அனுப்பானடி, சிந்தாமணி, ஐராவதநல்லூர், புதுக்குளம் பிட் 11, தியாகராஜர் காலனி ஆகிய 11 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு 100 வார்டுகளாக நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டு தற்போது நிர்வாக பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட ஆணையின்படி கீழ்க்கண்டவாறு மண்டல அலுவலகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

| வ. எண் | மண்டலங்கள் | மண்டலங் களை உள்ளடக்கிய வார்டுகள் | மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி | தற்போதைய மக்கள் தொகை (2011 மக்கள் தொகையின் 10 சதவீதம் கூடுதல் தோராயமாக) | மொத்த பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| 1. | மண்டலம் - 1 | 1 முதல் 23 | 410920 | 452012 | 35.25 Sq.Km |
| 2. | மண்டலம் - 2 | 24 முதல் 49 | 364559 | 401015 | 45.25 Sq.Km. |
| 3. | மண்டலம் - 3 | 50 முதல் 74 | 330158 | 363174 | 36.66 Sq.Km. |
| 4. | மண்டலம் - 4 | 75 முதல் 100 | 363362 | 399699 | 33.54 Sq.Km. |
| | | **மொத்தம்** | **1468999** | **1615900** | |

1996 முதல் 72 வார்டுகளுடன் பிரிக்கப்பட்ட நான்கு மண்டலங்கள் தற்போது வரை மக்களுக்கு அத்தியாவசிய பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது. 2011-ல் இணைக்கப்பட்ட பகுதிகளுடன் 28 வார்டுகளை உயர்த்தி மொத்தம் 100 வார்டுகளாக மறுவரையறை செய்து அதே நிலையில் நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. இணைக்கப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய 28 வார்டுகளுக்கு என தனி மண்டலம் தோற்றுவிக்கப்படவில்லை இந்நிலையில் மாமன்ற தீர்மான எண்.86 நாள்: 23.12.2011-ல் 100 வார்டுகளாக உள்ள மாநகராட்சியில் ஏழு மண்டல அலுவலகங்களாக பிரிக்க மாமன்ற தீர்மானம் பெறப்பட்டது. பொதுமக்களுக்கு மாநகராட்சியின் பணிகள் விரைவாக சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஐந்து மண்டலங்களாக தோற்றுவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் | மண்டலங்களுக்குள் அமையப்பெறும் வார்டுகள் விவரம் | மொத்த வார்டுகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | I - கிழக்கு | 3 முதல் 14 வரை, 16, 17, 18, 19, 36 முதல் 40 வரை | 21 |
| 2. | II - வடக்கு | 1, 2, 15, 20 முதல் 28 வரை 31 முதல் 35 வரை மற்றும் 63 முதல் 66 வரை | 21 |
| 3. | III - மத்தியம் | 50, 51, 52, 54 முதல் 62 வரை 67 முதல் 70 வரை மற்றும் 75,76,77 | 19 |
| 4. | IV - தெற்கு | 29, 30, 41 முதல் 49 வரை, 53 மற்றும் 85 முதல் 90 வரை | 18 |
| 5. | V - மேற்கு | 71 முதல் 74 வரை, 78 முதல் 84 வரை மற்றும் 91 முதல் 100 வரை | 21 |
| | | **மொத்தம்** | **100** |

மேற்கண்டவாறு ஐந்து மண்டலங்களை உள்ளடக்கிய வார்டுகளுடன் செயல்படுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் மாமன்ற தீர்மான எண்1238**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2.மவ.4/03172/2021**

மதுரை மாநகராட்சி கட்டிச்சட்டி மண்டபம் கழிப்பிடம் (நந்தி சிலை அருகில்) உள்ள கழிப்பிடம் மற்றும் மீனாட்சியம்மன் கோவில் வெளிபுறம் மீனாட்சி பூங்காவில் அமைந்துள்ள மாநகராட்சி கழிப்பிடம் பொது மக்கள் பயன்பெறும் வகையில் புணரமைப்பு செய்து பராமரிப்பு செய்து இணை ஆணையர் ஸ்ரீ அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் நிர்வாகம் பொறுப்பில் கழிப்பறையை முற்றிலும் இலவசமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைகளுடன் ஒப்படைக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1239**

**பின்னேற்பு செய்து**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3. மவ.1/013871/2021**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மண்டலம்-1 தண்ணீர் தொட்டி வளாகத்தை அப்துல்கலாம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு வழங்கியது. கேக்ஸ்பாட் யூனிட்டிற்கு அருகில் உள்ள பயிற்சி அறையையும் ஷட்டர் பொருத்தியுள்ள அறையையும் மராமத்து பணி பார்த்து ஒதுக்கீடு செய்து ஒரு வருட காலத்திற்கு இலவசமாகவும், ஒருவருடம் கழித்து குறைந்த வாடகையாக ரூ.1000/- என்ற அடிப்படையில் அப்துல் கலாம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு பேக்கரி யூனிட்டிற்கு ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டது

ஆணையாளர் மாநகராட்சி நேரடி ஆய்வு செய்த போது கேக் ஸ்பாட் யூனிட்டிற்காக மகளிர் சுய உதவிக்குழுவினர் பணிபுரிய ஒதுக்கீடு செய்யப்பட்ட அறைக்கு மேற்கண்ட. குழுவிற்கு தொடர்பு இல்லாத ஆண்கள் மட்டும் பணிபுரிவது தெரிய வந்துள்ளது.

மேலும் மாநகராட்சி அனுமதி இல்லாமல் Memorandum Agreement வரிசை எண்.12-யை மீறி உள்வாடகைக்கு விட்டது தெரிய வருகிறது. மதுரை மாநகராட்சி மூலம் ஆண்டு தோறும் வெளியிடப்படும் மாவட்ட அரசிதழ் பொது ஏல நிபந்தனைகளை மீறி ஒப்பந்தப்படி, உரிமக் கட்டணம் செலுத்தாததும் தெரியவந்துள்ளது.

மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகையை மாதந்தோறும் செலுத்தாமல் காலதாமதம் செய்து மாநகராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியது. மேலும் மாத வாடகை மாத மாதம் செலுத்தாமல் நிலுவையாக வைத்துள்ள காரணத்திற்காகவும், பொது ஏல விதிகளின் அடிப்டையில் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் உள்ளவர்கள் கட்டிடத்தை தேவைப்படவில்லை எனில் மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்

மேற்படி கட்டிடத்தை உள்வாடகைக்கு விட்டு மாநகராட்சி ஏல விதிகளை மீறி செயல்பட்டதால் அப்துல் கலாம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு வழங்கிய உத்தரவு மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.993 நாள்:04.01.2015 மற்றும் 1076 நாள்: 11.01.2016 ரத்து செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1240**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4.மவ.4/ம.பொ.4/17873/2019**

மதுரை மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்.80-ல் மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட இராணி மங்கம்மாள் சத்திர கட்டிடம் Plinth Area 511.00 சதுரடிக்கு வாடகை அடிப்படையில் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் அலவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.723 நாள்: 29.11.2019-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் 02.11.2021-ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு 01.12.2019 முதல் திருத்திய வாடகை ரூ.6000/- GST ரூ.1080/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும், ஒதுக்கீடு செய்யப்படும் மேற்படி கட்டிடம் அன்னாருடைய பதவி காலத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் மற்றும் பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் அலுவலக கட்டிடத்தை பூட்டி சாவி சகிதம் மாநகராட்சியில் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சட்டமன்ற உறுப்பினருக்கு பொதுப்பணி துறை மூலம் வழங்குவது போல் பாராளுமன்ற உறுப்பினருக்கு சலுகை அடிப்படையில் வழங்கிடவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1241**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5.மவ.4/013172/2021**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.4 வார்டு எண்.96 திருப்பரங்குன்றம் கோவில் முன்புறம் பெரிய தேரை ஒட்டி உள்ள கழிப்பிடம் மகளிர் குழுவினரால் பராமாரிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. பொது மக்களிடமிருந்து அதிகமான கட்டணம் வசூல் செய்வதாகவும் முறையாக பராமரிப்பு செய்வதில்லை எனவும் புகார் வந்தள்ளது. மேலும் முறையாக வாடகை செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பயன்படும் வகையில் திருப்பரங்குன்றம் கோவில் முன்புறம் பெரிய தேரை ஒட்டி உள்ள மாநகராட்சி பொது கழிப்பிடத்தை பொது மக்கள் பயன்பெறும் வகையில் பராமரிப்பு செய்து எந்தவித புகாரும் ஏற்படாதவாறு முற்றிலும் இலவசமாக பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கிட துணை ஆணையர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் நிர்வாகம் பொறுப்பில் மேற்கண்ட கழிப்பறையை உரிய நிபந்தனைகளுடன் ஒப்படைக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1242**

**பின்னேற்பு செய்து**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6.ம.பொ.5/123/20-21**

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் விநியோகத் திட்டம் I&II பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் வைகை அணை முதல் அரசரடி வரை பணியாளர்களை சப்ளை செய்து, பராமரிப்பு செய்து வந்த மதிப்பீட்டு வேலை உத்தரவு காலம் முடியும் தருவாயில் உள்ளது. எனவே குடிநீர் விநியோக அத்தியாவசியத்தினை கருதி, மேற்கண்ட பணிகளை இயக்கி பராமரிப்பு செய்து, நாள் ஒன்றுக்கு 115 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் பணிக்கு (சிப்பம்-1) மதிப்பீடு ரூ.97.83 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு 2021-2022 –ம் ஆண்டு விலை விகிதப்படி, அரசாணை எண். நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகம் சுற்றிக்கை ந.க.எண்.21787/2021/ E.A.2 நாள்: 02.10.2021-ன் படியும் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட குடிநீர் திட்டங்களை இயக்கி பராமரிப்பு செய்யவும் மின்மோட்டார்கள் பம்புகள், வால்வுகள், பிரதான குழாய்களை பராமரிப்பு செய்து இயக்கவும், இன்சூரன்ஸ் பாலிசி குடிநீர் பரிசோதனை செய்தல் ஆகிய இனங்கள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் நிர்வாக ஒப்புதலுக்கும், டெண்டர் வரவழைக்கவும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1243**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7.ம.பொ.1/125/20-21**

மதுரை மாநகராட்சி, வைகை குடிநீர் விநியோகம் மேலக்கால் நீரேற்று நிலையம், பழைய தச்சம்பத்து நீரேற்று நிலையம், அவனியாபுரம் நீரேற்று நிலையம்,தச்சம்பத்து – சித்தர்கள் நத்தம் திருப்பரங்குன்றம் நீரேற்று நிலையங்களில் பணியாளர்களை சப்ளை செய்து, பராமரிப்பு செய்து வந்த மதிப்பீட்டு வேலை உத்தரவு காலம் முடியும் தருவாயில் உள்ளது. எனவே குடிநீர் அத்தியாவசியத்தினை கருதி, மேற்கண்ட பணிகளை இயக்கி பராமரிப்பு செய்து நாள் ஒன்றுக்கு 26.94 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் பணிக்கு (சிப்பம்-3) மதிப்பீடு ரூ.99.80/- இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு 2021-2022-ம் ஆண்டு விலை விகிதப்படி, நிர்வாக இயக்குநரக அலுவலகம் சுற்றிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள்: 02.12.2021-ன் படி வழங்கப்பட்டுள்ள வழிக்காட்டுதல்களை பின்பற்றி தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட குடிநீர் திட்டங்களை தகுந்த பணியாளர்களை நியமித்து இயக்கி பராமரிப்பு செய்து இயக்கவும், இன்சூரன்ஸ் பாலிசி குடிநீர் பரிசோதனை செய்தல் ஆகிய இனங்கள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு ஒப்புதலுக்கும், டெண்டர் வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1244**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8.ம.பொ.2/015555/21**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக கடிதம் ந.க.எண்.20027/2021/தி2-2 நாள்: 08.09.2021-ல் 2021-22-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற கூட்டதொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானிய கோரிக்கையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

(அறிவிப்பு 15) போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 50 நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும்.

எனவே மேற்கண்ட அறிவிப்பு 15-ல் தெரிவித்துள்ளபடி மதுரை மாநகராட்சியில் நூலகங்கள் மற்றும் அறிவுசார்மையங்கள் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை பின் வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | திருத்திய மதிப்பீட்டு தொகை(ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 43 | காந்தி மியூசியம் அருகே மரு.தங்கராஜ் சாலை பகுதியில் நூலகம் மற்றும் அறிவு பூங்கா அமைத்தல் | 250.000 |

அந்த விரிவான திட்ட அறிக்கையை உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று டெண்டர் வரவழைப்பதற்கும், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் இப்பணியை மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1245**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9.ம.பொ.1/15784/21**

நமக்கு நாமே திட்டத்தை நகர்ப் பகுதியில் செயல்படுத்த அரசாணை மற்றும் செயலாக்க வழிகாட்டுதல் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அரசாணை எண் G.O.(MS) 71 நாள் 13.09.2021 வெளியிடப்பட்டுள்ளது. அதன் படி கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகள் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் மதுரை மாநகராட்சி பகுதியில் செயல்படுத் திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 37 | செல்லூர் லாரிஸ்டான்ட் பகுதியில் சலவை முற்றம் கட்டுதல் | 16.00 |
| 2. | 37 | குமரன் சாலை பகுதியில் பசுக்கள் காப்பகத்தில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் | 20.00 |
| 3 | 43 | மாநகராட்சி நீச்சல் குளம் அருகில் பூங்கா மற்றும் படிப்பகம் அமைத்தல் | 45.00 |
| 4 | 50 | உமறுப்புலவர் தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் | 8.10 |
| 5. | 51 | முனிச்சாலை மாநகராட்சி பள்ளிக் கூடத்தில் உள்ள கழிப்பறை கட்டிடத்தை அகற்றி புனரமைத்தல் | 6.75 |
| 6 | 57 | அனுப்பானடி பகுதியில் உள்ள பழுதடைந்த பள்ளி கட்டிடத்தை அகற்றி புதிதாக கட்டுதல் | 95.00 |
| 7. | 81 | பேச்சியம்மன் படித்துறை பகுதியல் சலவை முற்றம் அமைத்தல் | 15.00 |
| 8. | 94 | அவனியாபுரம் பகுதியில் நாய்கள் காப்பகம் மற்றும் பசுக்கள் காப்பகத்தின் சுற்றுப்புற சுவர்கள் கட்டுதல் | 20.00 |
| | | **மொத்தம்** | **225.85** |

இப்பணிக்கு நிர்வாக ஒப்புதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பெற்று தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி டெண்டர் வரவழைத்து பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1246 குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10.ம4இ2/554/21**

மதுரை மாநகராட்சி மண்டலம்-4 வார்டு-84-ல் கீழசித்திரை வீதியில் உள்ள மீனாட்சி பூங்காவின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி பெண்கள் கழிப்பறை தண்ணீர் வசதியின்றி கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளது

மேற்கண்ட கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் மீண்டும் அந்த இடத்திலலும் அதன் அருகே உள்ள இடத்திலும் சேர்த்து புதிதாக நவீன முறையில் கழிப்பறையும், அலுவலக கட்டிடம் ரூ. 35.00 இலட்சம் மதிப்பீட்டில் CSR நிதியில் கட்டுவதற்கும் அவ்வாறு கட்டப்படும் கழிவறையை CSR முறையில் தனியார் மூலமாகவோ அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் இணை ஆணையாளர் மூலமாகவோ பராமரித்து பொது மக்களுக்கு இலவசமாக பயன்பாட்டிற்கு வழங்கிட மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்:1247</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

**11.ம4இ2/554/21**

மதுரை மாநகராட்சி மண்டலம்-4 வார்டு-85-ல் தெற்கு சித்திரை வீதியில் பழைய காவல் ஆணையர் அலுவலகம் நுழைவு வாயில் நுழையும் இடத்தில் அமைந்துள்ள மாநகராட்சி ISP வளாக கழிப்பிடம் ஆணையாளர் அலுவலக உத்தரவு மவ3/40473/15-ன் படி நாள் 21.10.21 ரத்து செய்து உத்திரவிடப்படுள்ளது.

திருக்கோவில் நுழைவு வாயிலிற்கு எதிரிலேயே பாதையை மறித்து மிகவும் பழுதடைந்து சுகாதாரமற்ற நிலையில் உள்ள மேற்கண்ட ISP வளாக கழிவறையை இடித்து அப்புறப்படுத்தும் ஆணையாளரின் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்பதலைக் கோரும் ஆணையாளர் குறிப்பு

<u>மாமன்றத்தீர்மானம் எண்:1248</u>
<u>பின்னேற்பு செய்து</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

**12.ம.பொ.2/ம.எண்.502/21-22**

மதுரை மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண் : 43-ல் அமைந்துள்ள அறிஞர் அண்ணா மாளிகையில் பொன்விழா ஆண்டு நினைவு நுழைவுவாயில் அமைக்கவும் 50 ஆண்டுகள் பழமையான கட்டிடத்தை மராமத்து செய்த புனரமைக்கும் அபிவிருத்தி பணிக்களுக்காவும் ரூ.3.50 கோடியில் மதிப்பீடு 2021-2022-ம் ஆண்டு விலை விகிதத்தில் தயார் செய்யப்பட்டள்ளது.

மேற்கண்ட மதிப்பீட்டுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு கோரியும் நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் பெறவும் நகராட்சி நிர்வாக இயக்குநகரத்திற்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்:1249</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>.

**13.ம.பொ.2/018239/21-22**

மதுரை மாநகராட்சி மண்டலம்-2 வார்டு-43-ல் மாநகராட்சி நீச்சல்குளம் எதிர்புறம் அறிவுசார் மையம் மற்றும் நூலகம் கட்டுவதற்கு உத்தேகிக்கப்பட்டுள்ள மாநகராட்சி இடத்தில் மிகவும் பழுதடைந்த கட்டிடம் உள்ளது. பழுதடைந்த கட்டிடம் தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால், அக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த ஆணையாளர் அவர்களால் 09.11.2021 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கண்ட பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்:1250</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>.

**14.பி3/000063/21**

மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் ஊதியம் உள்ளிட்ட இனங்கள், அனைத்து வித ஒப்பந்தப் பணிகள், வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்களை வழங்கும் சேவைகள், மதுரை மாநகராட்சியின் அலுவலகத்திற்கு சப்ளை செய்யப்படும் இதர தளவாட சாமான்கள் மற்றும் அச்சிடுதல் உள்ளிட்ட அனைத்து இனங்களுக்கும் வழங்கப்படும் தொகையினை 01.12.2021 முதல் பெறுநரின் கணக்குகளில் மின்னணு தீர்வு சேவை (Electromics Clearing Service) மூலமாக மட்டுமே வழங்குவதற்கும் அவசர செலவின தொகை மற்றும் தவிர்க்க இயலாத நேர்வுகளில் மட்டும் ஆணையாளரின் சிறப்பு ஒப்புதல் பெற்று காசோலை உள்ளிட்ட பிற வகைகளில் தொகை வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்:1251</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>.

**15.மதி.1/016671/2014**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்களில் விதி மீறல் உள்ள இனங்களில் சொத்து வரி விதிப்பு செய்யும் பொழுது ஒரு சதுர அடிக்கு 50 பைசா வீதம் அபராதத் தொகை கணக்கிட்டு வசூல் செய்ய வேண்டும் என ஏற்கனவே தீர்மானம் இயற்றப்பட்டு அதனடிப்படையில் சொத்து வரியுடன் சேர்த்து அபராதத்தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இதனை தற்போது வணிக கட்டிடங்களுக்கு மட்டும் ஒரு சதுர அடிக்கு ரூ.1/- என உயர்த்தி அபராதம் விதிக்கவும், பிற கட்டிடங்களுக்கு ஏற்கனவே உள்ள அபராதத் தொகை ஒரு சதுர அடிக்கு 50 பைசா என்ற நிலையையே தொடரவும்.

மேற்கண்ட அபராதத் தொகையை புதிதாக கட்டப்படும் வணிக கட்டிடங்களுக்கு 01.10.2021 முதலும் ஏற்கனவே உள்ள அனுமதி பெறாத மற்றும் விதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள வணிக கட்டிடங்களுக்கு 01.04.2022 முதலும் ரூ.1/- வீதம் அபராதம் விதிக்கவும் அரசிதழில் வெளியிடவும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்:1252</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16.ஒ4/17586/2021**

மதுரை மாநகராட்சி பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் நலன்கருதி பள்ளி தலைமைஆசிரியர்கள் கோரிக்கையின்படி மாநகராட்சி 97 பள்ளிகளிலும் 120 தூய்மைபணியாளர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் பள்ளி தலைமை ஆசிரியர்களே தூய்மை பணியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக நாள் ஒன்றுக்கு ரூ.461/- வீதம் (பணிபுரியம் நாட்களுக்கு மட்டும்) தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

- பணியாளர்களை தினக்கூலிஅடிப்படையில் வேலை நாட்களுக்கு மட்டும் பணிக்குஅமர்த்திக் கொள்ளலாம்.
- ஆண்டுக்கு அதிகபட்சம் 11 மாதங்கள் வரை மட்டும் அனுமதி.
- தினக்கூலி முறையில் மட்டுமே பணி வழங்கிட வேண்டும்.
- ஒரே நபரை தொடர்ந்து பணியமர்த்திட வேண்டியது இல்லை.
- தலைமை ஆசிரியர்கள் மாநகராட்சி கல்வி அதிகாரியிடம் பிரதி மாதம் வருகை நாட்கள் விவரத்துடன் பட்டியல் சமர்ப்பித்து முந்தைய மாதத்தின் தினக்கூலி தொகை மற்றும் அடுத்த மாதத்திற்கான பொருட்கள் செலவின முன் தொகை ரூ.1000/-பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி செலவினத்தொகை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மாதம்தோறும் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1253**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17.ஒ4/015135/2021**

மதுரை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் மாணவமாணவியர்கள் அதிகமாக சேர்ந்துள்ளார்கள். அம்மாணவ மாணவியர்களின் நலன் கருதி கூடுதல் ஆசிரியர்கள் தேவை என தலைமை ஆசிரியர்கள் கோரியுள்ளார்கள். அதன் பேரில் பள்ளிகளில் தேவைப்படுகின்ற முதுகலை பட்டதாரி பாட ஆசிரியர் 31 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க கோரி அரசுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட பணியிடங்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து அவர்களுக்கு மாதம் ஒன்றுக்குரூ.12,000/- தொகுப்பூதியம் அடிப்படையில் 31ஆசிரியர்களை ஆறு மாதகாலத்திற்கு மட்டும் முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்துவதற்கும் அதற்கான செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1254**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18.எ1/014421/2021**

மதுரை மாநகராட்சி பகுதியில் உள்ள நான்கு மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 1 முதல் 100 வார்டுகளில் 40 கணினி வரி வசூல் மையம் செயல்பட்டு வருகிறது. மேற்படி கணினி வரி வசூல் மையங்களில் வசூல் செய்யும் தொகையினை வங்கி மூலம் பரிவர்த்தனை செய்து மாநகராட்சி கணக்கில் பல்வேறு தலைப்புகளில் வரவு வைக்கப்படுகிறது. வருவாய் உதவியாளர்களால் வசூல் செய்யப்படும் தொகை கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. தற்பொது பொதுமக்கள் வரி செலுத்துவதை எளிதாக்கும் வகையில் நவீன முறையில் பல்வேறு வங்கிகளுடன் இணைத்து வசூல் நடைமுறை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக அனைத்து வரிவசூலர்கள், கருவூலத்தில் மற்றும் வரி வசூல் மையங்களில் 01.12.2021 முதல் HDFC வங்கி வழங்கிடும் POS இயந்திரம் மூலம் வரி வசூல் நடைமுறையில் மேற்கொள்ளவும்,

இதன் அடுத்த கட்டமாக வீடுகளுக்கு நேரில் சென்று வரி வசூல் செய்யும் நேர்வுகளில் அங்கேயே நேரடியாக POS இயந்திரங்கள் மூலம் E-Receipt /SMS Receipt ரசீதுகள் வழங்கவும், மண்டலங்கள், இதர இடங்கள் மற்றும் வசூல் மையங்களை ஆய்வு செய்து பயன்பாடு குறைவாக உள்ள மையத்தை மூடி விட்டு அதற்கு பதிலாக இவ்வசதிகளை வழங்க முன்வரும் வங்கிகளில் கிளைகளில் நேரடியாக மக்கள் வரி செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வசதி உருவாக்கி அதற்கான புரிந்துணவு ஒப்பந்தம் மேற்கொள்ளவும்,

01.01.2022 முதல் நேரடி வரி வசூல் மற்றும் வரி வசூல் மையங்களில் NEFT,RTGS,CREDIT,CARD,DEBIT CARD, G-PAY/UPI/PAYTM உள்ளிட்ட பரிவர்த்தனை முறைகள் மற்றும் DD/CASH ஆகிய முறைகளில் மட்டும் வரிவசூல் செய்யும், இவ்வினங்களில் காசோலைகள் பெறுவதை நிறுத்தவும், வங்கி கிளை வசூல் மையங்களில் மட்டும் காசோலைகளை பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:1255**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**19.ம.ச.1/015752/2021**

மதுரை மாநகராட்சி சார்பில் சென்னை உயர்நீதி மன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்த மதுரை மாநகராட்சி நிலைக்குழு வழக்கறிஞர்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். கடைசியாக மாமன்ற தீர்மானம் எண்.1160 நாள்:29.09.2021-ன்படி கீழ்கண்ட எண்ணிக்கைகள் சீரமைக்கப்பட்டது.

| | |
|---|---|
| சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் | – 7 |
| சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் | – 1 |
| மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர்கள் | – 3 |
| மொத்தம் | 11 |

ஆக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு கூடுதாலக 1 வழக்கறிஞரும், மாவட்ட நீதிமன்றத்திற்கும் கூடுதாலக ஒரு வழக்கறிஞரும் நியமனம் செய்து

| | |
|---|---|
| சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் | – 8 |
| சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் | – 1 |
| மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர்கள் | – 4 |
| மொத்தம் | 13 |

ஆக வழக்கறிஞர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் (தனி அலுவலரின்) ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்:256**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**இடம் : மதுரை**
**நாள் : 10.11.2021.**

**(ஒம்..)கா.ப.கார்த்திகேயன்,இ.ஆ.ப.,**
**ஆணையாளர்/ தனி அலுவலர்**
**மதுரை மாநகராட்சி.**